[2nd March 1968

என்றும் சொல்லி இவை இரண்டிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போதிருக்கிற புரொக்கியூர்மெண்ட் விலைகள் "Producer-consumer-oriented" என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் கணக்குப் பார்த்தபிறகு, நிர்ணயித்த விலைதான் இன்று இருக்கிறது. திடீரென்று இந்த மார்ச் மாதத்தில் ஏற்பட்டதல்ல. இதையே தான் முதலிலும் கொடுக்கப்பட்டது.

திரு. டி. கே. சுப்பையா : நெல் விலை உயர வேண்டுமென்று சொல்லும்போது அதை அரசியல் பிரச்சனையாகவே கருதிக்கொண்டு "நாங்கள் எல்லாம் விவசாயிகள் அல்ல" "விவசாயிகள் பிரதிநிதிகள் அல்ல" என்று கருதாமல் இனிமேலாவது இந்த மந்திரி சபை இது விவசாயிகளின் பிரச்சனை என்று கருதுமா ?.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நானும் விவசாயிதான். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். விவசாயம் செய்து கொண்டு வருபவர்கள் தான். விவசாயம் என்பது தங்களுக்கு மட்டும் ஏக போகமானது என்று யாரும் கருதத் தேவையில்லை. இந்த நாட்டிலுள்ள எல்லோருமே குடியானவ மக்கள் தான். இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு விரோதமானதல்ல. இதற்கு முன்னால் இங்கேக் எதிர்கட்சியில் இருந்த ஆர். வெங்கடராமன் அவர்கள் இப்போது பிளானிங் கமிஷனில் இருக்கிறார்கள். என்னை ஒரு சமயம் அவர்கள் வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு அழைத்திருந்தார், டெல்லிக்கு உணவு மாநாட்டுக்குப் போயிருந்த சமயத்தில். அப்போது " இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் கொள்முதல் பற்றிக்கூறுவது சரியா " என்று கேட்டேன். அவர்களுடைய சகோதரர் பட்டுக்கோட்டையில் வக்கீலாகவோ விவசாயியாகவோ இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து வந்த கடிதத்தை என்னிடம் காட்டினார்கள். அதில் அவர், " என்னுடைய நெல்லை கொள்முதலுக்குக் கொடுத்து விட்டேன். 20 வருஷத்தில் யார் நமக்கு இந்த விலையைக் கொடுத்தார்கள். தி. மு. க. அரசாங்கம் கொள்முதலில் நல்ல விலை கொடுத்து இருக்கிறார்கள்" என்று எழுதியிருந்தார். ஆகையால் அவர்கள் கொள்முதல் விலையை வரவேற்றிருக்கிறார்கள். உணவுப்பொருள் விலை ஏறிக் கொண்டே போனால் மற்ற பொருட்களின் விலையும் ஏறும். விலையை ஸ்திரப்படுத்த கணக்கெடுக்கப்படுகிறது. கடந்த வருஷம் இரண்டு லட்சம் டன் தஞ்சையில் கொள்முதல் செய்யப்பட்டது. காலாகாலத்தில் லாரிகளில் ஏற்றி, ரயிலில் போட்டு பணம் எல்லாம் கொடுத்து வெளியிலே கொண்டுபோகாமல் இருந்திருந்தால் ரூபாய் 30-க்கு வந்திருக்கும். அப்படி ஏற்படும் என்று காட்கில் எச்சரித்தார். ரூ. 30க்கு வாங்குவதற்கு ஆள் இல்லாமற் போய் விட்டது. ஆகையால் சரியான விலை தான் இது. Consumers களையும் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் விவசாயிகளிடமும் இந்த அரசு அக்கரை கொண்டுள்ளது.

Rice supply

***153 *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state —**

(*a*) whether a representation was made to the Sub-Collector, Sivakasi, demanding the opening of fair-price shops to supply 12 ozs. of rice by Thiruvalargal, Subbarajah, M.L.A., Ulaganathan and Alagarsami on behalf of the farmers, society in Ramanathapuram District ; and

(*b*) if so, the steps taken thereon ?

அரிசி வழங்கல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் சங்க சார்பில் 1967 அக்டோபர் மாதத்தில் திருவாளர்கள் சுப்புராஜா, எம்.எல்.ஏ.,

2nd March 1968]

உலகநாதன், அழகர்சாமி ஆகியவர்கள் சிவகாசி சப்-கலெக்டரைச் சந்தித்து கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகள் திறந்து 12 அவுன்சில் அரிசி போட வேண்டுமென மகஜர் கொடுத்தனரா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) அரிசி இருப்பு குறைவாக இருப்பதால், கிராமங்களில் 'வாரந் தோறும் ஒருவருக்கு 1,200 கிராம் அரிசி வீதம் பகிர்ந்தளிக்க இயலவில்லை யென அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இந்த வருடத்தில் வழக்கத்திற்கு மாறாக, மேற்கு ராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக சாத்தூர் தாலுக்கா வறட்சியடைந்த நிலையில், பயிரெல்லாம் கருகிவிட்டதால் மக்கள் மிகவும் உணவுக் கஷ்டத்தில் இருக்கிறார்கள். ஆகையால் மற்ற எந்தவிதமான சங்கடங்கள் இருந்தாலும் கூட, அந்த இடங்களில் நியாய விலை' கடைகள் திறக்க சர்க்கார் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதிருக்கிற நம்முடைய நிலைமைகளை வைத்துத்தான் இந்த நிலை மேற்கொள்ளப்பட்டது. இப்போது, அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற, எதிர்பாராத நிலைமைகளைச் சர்க்கார் ஆராய்ந்து, கவனித்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை பற்றிப் பரிசீலித்து வருகிறது. தேவையான சாத்தியக் கூறுகள், காரணங் கள் இருக்குமானால் இவைகளைச் செய்ய அரசாங்கம் ஒருக்காலும் தயங்காது.

Hydro-Geological Surveyors

*** 154 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any hydro geological surveyors are working in the Agriculture Department ; and

(*b*) if so, the number of such surveyors and the names of districts in which they are working ?

நிலத்தினுள் நீரோட்டம் இருப்பதைக் காணும் ஆராய்ச்சி அதிகாரிகள்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிலத்தினுள் நீரோட்டம் இருப்பதைக் காணும் ஆராய்ச்சி அதி காரிகள் விவசாயத் துறையில் செயல்படுகின்றனரா ?

(இ) ஆம் எனில், எத்தனை அதிகாரிகள் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகின்றனர் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, இந்தப் பருவ கால மழை அடிக்கடி பொய்த்து விடுகிறது. ஆகவே நிலத்தினுள் ஓடும் நீரைப் பயன்படுத்திக்கொள்ள கிணறுகள் வெட்டக் கடனாக பணம் கொடுக்கும்போது, நீரோட்டம் எங்கிருக்கிறது என்று காண அரசாங்கத் திலிருந்து சில நிபுணர்களை போடுவது தான் சிறப்பாக அமையும். அது இல்லாமல் ஜோசியம் சொல்வது போல சிலர் சொல்லி, விவசாயிகளை ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரசாங்கமே அத்தகைய நிபு ணர்களை நியமித்துக் கொடுத்து அவர்கள் சொல்லியதில் தண்ணீர் கிடைக்கா விட்டால், அதற்குண்டான செலவுகளை விவசாயிகள் கேட்கும் நிலை உண்டா